## முற்கூட்டிய மொழிஊக்குவிப்பு
## Biel-Benken, Binningen, Bottmingen, Ettingen, Oberwil und Therwil

### தொடக்கச்செயல்திட்டம் „Frühe Sprachförderung im Leimental“ மேலோட்டம்

**பின்னணி**
எமது நாளாந்த கடமைகளில் டொச்மொழியை விளங்கிக்கொள்ளல் என்பது மிகமுக்கிய பங்கினை வகிக்கிறது. வெற்றிகரமான பாடசாலை வாழ்வுக்கும் அதன் பின்னயதான தொழில்சார் நுழைவுக்கும் மொழித்திறன் இன்றியமையாதது. எமது வாழ்வின் முதல் மூன்று வருடங்களும் மொழி உள்வாங்கலானது விளையாட்டு விளையாட்டாக கற்க மிக இலகுவானதாகும்.
Biel-Benken, Binningen, Bottmingen, Ettingen, Oberwil Therwil என்ற ஆறு ஊராட்சிமன்றங்களை உள்ளடக்கிய லைமன்தாளின் பிரதான நோக்கம் பிறமொழியினை தாய்மொழியாகக்கொண்ட குழந்தைகள் ஆரம்பத்திலேயே டொச்மொழியினை கற்கவேண்டும் என்பதே. அதனால் அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து ”முற்கூட்டிய மொழிஊக்குவிப்பு” என்னும் ஒரு தொடக்கச் செயற்திட்டமொன்றினை உருவாக்கி அதற்கு செயல்வடிவம் கொடுத்துள்ளார்கள்.

**நோக்கம்**
இந்த மூன்று வருடகால தொடக்கசிசெயற்திட்டத்தின் (ஆகஸ்ட் 2020 முதல் யூன் 2023 வரை) நோக்கமானது பிறமொழியை சேர்ந்த குழந்தைகளுக்கு அவர்களின் பாலர்பாடசாலை நுழைவுக்கு ஒரு வருடத்துக்கு முன்பே டொச்மொழியினை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களின் பாலர்பாடசாலை நுழைவின் போது டொச்மொழி தெரிந்தவர்களாக நுழையவேண்டும் என்பதே.

**தெரிவானவர்கள்**
இச் செயற்திட்டத்தின் நோக்கத்துக்கு தெரிவாகுபவர்கள் பிறமொழியை தாய்மொழியாக கொண்ட, டொச்மொழியை தாய்மொழியாக கொள்ளாத, பாலர்பாடசாலை செல்வதற்கு ஒரு வருடமுள்ள குழந்தைகள்.

**நாளாந்த மொழி ஊக்குவிப்பு**
மொழி ஊக்குவிப்பானது குழந்தைகளின் நாளாந்த நிகழ்வில் ஒன்றியது. மொழி ஊக்குவிப்பாளரின் நிபுணத்துவ அறிவுக்கு உறுதுணையாக பிறமொழிக்குழந்தைகள் மற்றும் டொச்மொழிக்குழந்தைகளுக்கு ்இடையேயான தொடர்பாடலும் மொழி கற்றலுக்கு இன்றியமையாதது.

**மொழி ஊக்குவிப்புக்கான வாய்ப்பு**
இத் தொடக்கச் செயற்திட்டத்தின் மொழி ஊக்குவிப்பானது வாரத்துக்கு இரண்டு அரைநாட்கள் நடைபெறும். இது ஒரு வருட காலத்துக்கு விளையாட்டுக்குழுமம் (ஸ்பீல்குறுப்ப), குழந்தைகள் பராமரிப்பகம் அல்லது தனியார் பராமரிப்பகம் போன்ற ஒன்றில் இடம்பெறும்.

**சலுகைகளில் ஒன்றை தெரிவுசெய்வது**
தாங்கள் தங்கள் குழந்தையை சேர்க்க விரும்பும் எதையாவது ஒரு விளையாட்டுக்குழுமம் (ஸ்பீல்குறுப்ப), குழந்தைகள் பராமரிப்பகம் அல்லது தனியார் பராமரிப்பகம் ஒன்றை பெற்றோரே தெரிவு செய்யலாம்.

**ஊராட்சிமன்றத்தின் (கெமைன்டே) பொருளாதாரப்பங்களிப்பு**
இக்கல்விக்கான செலவின் ஒரு பகுதியை ஊராட்சிமன்றம் ஏற்றுக்கொள்ளும். உங்களின் வருமானத்தின் அடிப்படையில் ஊராட்சிமன்றத்தின் பங்கேற்பு அமையும்.


மேலதிக தகவல்களுக்கு:
Sabrina Hollinger
தலமை அமைப்பாளர் முற்கூட்டிய மொழிஊக்குவிப்பு, லைமன்தாள்
☎ 061 405 43 26
✉ sabrina.hollinger@oberwil.bl.ch